Kalanjiyam International Journal of Tamil Studies ISSN: 2456-5148 (Online)
An international, peer-reviewed quarterly academic research journal www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

Vol. 6 No. 02, August 2026, **p146-157** | Available online at: www.ngmtamil.in

Original Research Paper

மருதத்திணைப் பாடல்கள் உணர்த்தும் ஊடல் வழி வாழ்வியல் அறம்

The Ethics of Living Conveyed Through Lovers Lovers Quarrels in Marutham Landscape Poems

ஜெயந்தி. ந,

முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்) (BDU.19489), முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது) திருச்சிராப்பள்ளி – 620 017. தமிழ்நாடு - இந்தியா

Jayanthi. N*,

Ph. D Scholar (Full Time), P.G. & Research Department of Tamil, Bishop Heber College (Autonomous), Tiruchirappalli – 620 017
Email: jayanthiravichandran14@gmail.com, Cell No: 9942035652

முனைவர் கோபிநாத். அ,

நெறியாளர், இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி – 620 017.

Dr. Gopinath. A,

Research Guide, Associate Professor, P.G. & Research Department of Tamil
Bishop Heber College (Autonomous), Tiruchirappalli – 620 017

Article history
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 29-07-2026
Published: 01-08-2026

*Corresponding Author Email: *:*
jayanthiravichandran14@gmail.com
Tel: *+919942035652*

Abstract: Due to significant transformations in the lifestyle and social structure of the people of the Marutham region, this region appears more advanced than the other landscapes.

The heroine of the *Marutham* landscape is recognized for her excellence in managing the household and her commitment to preserving noble social traditions for future generations. The *Parathai* (courtesan) is the primary cause of the lovers' tiff—a characteristic feature of this landscape. Poets depict the heroine expressing her displeasure regarding her partner's misconduct through the use of *Ullurai* (implicit imagery), drawing upon natural phenomena, the behavior of other living creatures, and various occupations and events. One can discern how a sense of comparative justice is conveyed through the *Marutham* poems by juxtaposing the heroine's feigned lovers' quarrel—triggered when the hero deviates from noble conduct—with the ethics of warfare. These poems establish the agency of women by highlighting the life-affirming principle that a lovers' quarrel, when resolved through reconciliation, paves the way for human flourishing.

Keywords: *Marutham landscape, Lovers tiff, Code of conduct specific to the landscape, Courtesan, code of Warfare, Pointing out, Ullurai (implied meaning/inner content), Animals, Vocative case, justice.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ஆய்வுச்சுருக்கம்

மருதநில மக்களின் வாழ்க்கை முறையிலும், சமுதாய அமைப்பிலும் பெருமாற்றம் தோன்றியதால் மற்ற நிலங்களின் வாழ்க்கை முறையைக் காட்டிலும் மருதநிலம் மேம்பட்டு காணப்படுகிறது. இல்லற நிர்வாகத் திறனிலும், சமுதாயத்தில் நல் மரபுகளை பின்வரும் சந்ததியினருக்கு காத்தளிக்கும் பொறுப்பில் மருதநிலத் தலைவி சிறந்து விளங்குவதாக அறியப்படுகிறது. இந்நிலத்திற்கே உரித்தான ஊடலுக்கு பெரிதும் காரணமாகிறாள் பரத்தை. தலைவனின் இத்தீய ஒழுக்கத்தை இயற்கை நிகழ்வுகளுடனும், பிற உயிரினங்களின் செயல்பாடுகள் மூலமாகவும், தொழில்கள், நிகழ்வுகள் கொண்டும் உள்ளுறை வைத்து தலைவி ஊடல் கொள்வதை புலவர்கள் பாடல்வழி அறியப்படுகிறது. தலைவனின் உயர்நெறிப் பிறழில் ஊடல் கொண்டும், போர் நெறியை கொண்டும் ஒப்பீட்டு நீதி உணர்த்துவதை அறியமுடிகிறது. ஊடல் கூடலில் முடிவது மானுடம் சிறக்க வழிவகுக்கும் என்னும் வாழ்வியல் அறத்தை மருதப்பாடல்களின் வழி மகளிரின் திறன் மேம்பட்டு நிற்கின்றன என்பதை நிறுவுவதாக அமைகின்றது.

திறவுச் சொற்கள்

மருதநிலம், ஊடல், திணைஒழுக்கம், பரத்தை, போர்நெறி, சுட்டுதல், உள்ளுறை, விலங்குகள், விளித்தல், நீதி.

முன்னுரை

உயர்ந்த கற்பனை, விழுமிய உணர்ச்சி, அழகிய வடிவமைப்பு கொண்டு படிப்பவரைப் பரவசப்படுத்தும் இலக்கியங்களில் அன்பின் ஐந்திணைப் பாடல்கள் சிறப்புடன் திகழ்கின்றன. இத்திணைப்பாடல்களில் மருதநில மகளிரின் உண்மையான உள்ள உணர்வுகளையும், உயர்ந்த பண்பினையும், மகளிரின் நலன்களை மிக ஆழமாக சித்தரித்துக் காட்டுவதோடு மட்டுமின்றி, அம்மகளிரின் தலைச்சிறந்த எண்ணத்தையும் பெருந்தன்மையையும் விளக்குவதாகவும் அமைகின்றது. இம்மருதத்திணைப் பாடல்களை புனைந்த புலவர்கள் அத்திணைச் சார்ந்த தலைவியின் ஊடல் வழியே எவ்வாறு வாழ்வியல் அறத்தை கட்டமைக்கின்றனர் என்பதை அராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திணை ஒழுக்கம்

திணை என்பது ஒழுக்கம் என்னும் பொருளுடையதைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலிய நிலப்பெயர்கள் புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் முதலிய ஒழுக்கங்களை உணர்த்துவதால் திணை ஒழுக்கம் என்னும் பொருளை உணர்த்துவதை அறியலாம். திணை ஒழுக்கத்தையே குறிக்கும் என்பதற்கு,

“கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்”

(தொல்.இளம் (உ.ஆ) பொருள். நூ.எ.1, ப. 5)

“மக்கள் நுதலிய, அகன் ஐந்திணையும்” (மேலது, நூ.57, ப.70)

“புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே” (மேலது, நூ.58, ப.70)

DOI: https://doi.org/10.63300/kijts06022026.15

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் சான்றாகும்.

உரிப்பொருள்

"அகவொழுக்கத்திற்கு உரிய ஒருவன் ஒருத்தியின் கூட்டு வாழ்வுக்கு உரியபொருள்" (புலவர் குழந்தை, தொல்காப்பியர், கலைத்தமிழர், ப.105)

மேலும் மக்கள் நிகழ்த்தும் ஒழுக்கமே உரிப்பொருள் ஆகிறது. மருதத்திற்கு ஊடல் உரித்தென்பது, ஒரு மரபுவழிப் புனைவு பற்றியதாகும். இதனை தொல்காப்பியரும்,

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்கு உரிப்பொருளே" (தொல்.பொருள்.அகத் நூ. 16)

என்று சுட்டிய இடத்து, எந்தெந்த திணைக்கு எவையெவை உரியது என விளக்காதது குறிப்பிடத்தக்கது. இதற்கு உரை எழுதிய இளம்பூரணர்,

"புணர்தல் என்பது குறிஞ்சிக்கும், பிரிதல் என்பது பாலைக்கும், இருத்தல் என்பது முல்லைக்கும், இரங்கல் என்பது நெய்தலுக்கும், ஊடல் என்பது மருதத்திற்கும் பெரும்பான்மையும், உரித்தாகவும் சிறுபான்மை எல்லாப்பொருளும் எல்லாத் திணைக்கும் உரித்ததாகவும் கொள்ளப்படும்." என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் பெரும்பான்மை மருதத்திணைக்கு ஊடலையே உரியபொருள் என உரித்தாக்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

ஊடல்

ஊடல், மிக மிக நுட்பமானதாம், உளநூலின் நுட்பமெல்லாம் இதன்கண் உளதாம். இதன் முதிர்ந்தநிலை துனி எனப்படும் புலவி, ஊடல், துனி என்ற மூன்றும் புலத்தல் அடிப்படையானவை. முதிர்ந்த துனியாய வழி துன்பம் பயக்கும். முதிராத புலவியாயவழிக்கலவி இன்பம் பயவாது. ஆதலாள் கணவன் மனைவியரிடையே இன்பத்தை மிகுவிக்க ஊடல் வேண்டும். ஊடலே அளவானதும் உயர்வானதும் ஆகும். திருவள்ளுவரும்,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம்" (குறள், 1330)

என அதன் சிறப்பைப் புலப்படுத்துகின்றார். அன்பும் உரிமையும் சினக்குறிப்பும் தோன்ற அளவு கடந்த பாசத்தால் பிணங்குதல் ஊடல் என்று விளக்கப்படுகிறது.

ஊடலுக்குரிய பொழுது

"மருதநிலம் நீர் நிரம்பியது. நெல் விளைவிப்பது, அறுசுவை உணவும் அளிப்பது, நெல்லால் ஆக்கிய சோற்றை உண்ணும் மக்கள் அறிவிற் சிறந்து விளங்குதலும், அரிசிக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பை அறியமுடிகிறது. அறிவின் முனைப்பால் நிகழ்த்தும் ஊடலுக்கு நிலம் மருதம்" (நா. ஆறுமுகம், கலித்தொகை – ஒரு ஆழ்வாய்வு, ப.54) என்று தொல்காப்பியனார் வகுத்த திறனும் அறிவு தூய்மைபெற்றுத் தெளிந்து விளங்கும்பொழுது வைகறையே என்பதும் அதனையே ஊடலுக்குரிய பொழுதாக வைத்திருப்பதும் அக்கால மக்களின் அறிவின் முதிர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. "காதல் வாழ்வு வாழும் உயிர்களுக்குக் கண்ணால் அமைந்து பேரின்பம் வழங்கும் உயரிய பண்பே

ஊடல்" என்று பேராசிரியர் (ந. சஞ்சிவி, உணர்வின் எல்லை, ப.125) ஊடலைச் சிறப்பிக்கின்றார் என்பதை அறியமுடிகிறது.

ஊடலுக்கான காரணங்கள்

"தலைவன் தலைவியரிடையே நிகழும் ஊடலுக்கும் காரணங்கள் பல கூறப்படுகின்றன. தலைவன் பூமாலையைச் சூடுதலும், தும்முதலும், தலைவிக்கு அஞ்சித் தும்மலை அடக்குதலும், இமையாது. தலைவியை நோக்குதலும்" (குறள், 1312, 1313) ஊடற் காரணங்களாய் அமைகின்றன. மேலும் ஒளி பொருந்திய பொறிகளை உடைய மயிலினைத் தலைவன் நோக்க, தலைவி – நீ இகழுதற்காகவே என்னை நோக்காது மயிலை நோக்கினாய் என்று ஊடுகின்றாள். உடன் தலைவன் உன்னுடைய சாயலைக் களவு கொள்ள வந்து இயலாது மயில் வருந்தி நிற்கின்றது. அதனைக் கண்டு, உனது சாயலின் அருமையை நான் நினைக்க, உன்னை இகழ்ந்த்தாக்க் கருதி நீ ஊடுகின்றாய் எனக்கூறி அவள் ஊடலைத் தீரக்கின்றான். இந்நிகழ்வை,

"ஒன்னொளி மணிப்பொறி ஆல்மஞ்சை நோக்கித்தன்
உள்ளந்து நினைப்பானைக் கண்டனன் திருநுதலும்
உள்ளிய துணர்ந்தே எஃது உரையினி நீ எம்மை
எள்ளுதல் மறைத்த ணேம்பு என்பானைப் பெயர்த்தவன்
காதலாய் நின்னியன் களவெண்ணிக் களிமகிழ்
பேதுற்ற இதனைக்கண்டு யான்நோக்க நீ எம்மை
ஏதிரை நோக்குதி என்றாங்கு உணர்பித்தல்" (பரி. 18:7-13)

எனும் வரிகள் விளக்குகின்றன.

இதுகாறும் ஊடலுக்கான காரணங்கள் பல கூறப்படினும் மருதத்திணையில் நடைபெறும் ஊடல் பெரும்பாலும் தலைவன் பரத்தையர் மாட்டுச் செல்வதைக் கண்டித்துத் தலைவி ஊடுவதாகவே அமைந்துள்ளது.

மருதநில மகளிரின் ஊடல் காரணங்கள்

தலைவன் தன்னால் விரும்பப்பட்ட பரத்தையோடு காவிரிப் பேரியாற்றில் முகமலர்ச்சியோடு, மார்பிலணிந்த பூமாலை குழையும்படி நீராடினான் என்பதற்காக ஊடினாள். இதனை,

"கழை நிலை பெறாஅக் காவிரி நித்தம்
குழைமாண் ஒள்இழை நீ வெய்யோனொடு
வேழ வெண் புணை தழீஇ, பூழியர்
கயம் நாடு யானையின் முகன் அமர்ந்தா அங்கு
ஏந்து எழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெடுநல் ஆடினை, புனலே" (அகம். 6:6-11)

என்னும் வரிகளால் அறியலாம். மற்றொருத்தி, புதுநீர் வெள்ளத்தில் இளந்துணை மகளிரொடு நாணத்தை இழந்து விளையாடினான் தலைவன் என்று கூறி ஊடியதை,

"கோடுற நிவந்த நீடுஇரும் பரப்பின்
அந்திப் பராஅயப் புதுப்புனல் நெடுநை

DOI: https://doi.org/10.63300/kijts06022026.15

மைந்து மலி களிற்றின் தலைப்புணை தழீஇ
நரந்தம் நானும் குவை இருங் கூந்தல்
இளந்துணை மகளிரொடு ஈர்அணிக் கலைஇ
நீர்பெயர்ந்து ஆடிய ஏந்து எழில் மழைக்கண்
நோக்குதொறும் நோக்குதொறும் தவிர் விலையாகி
காமம் கைம்மிகச் சிறத்தலின், நாண்இழந்து ஆடினை," (அகம். 266:1-9)

என்பதை இப்பாடலடிகளின் வழி அறியமுடிகிறது.

"பரத்தையரொடு சென்று புனலாடியமையால் ஊர் அலரெழுந்தது எனக் கூறி ஊடினாள் இன்னொருத்தி" (அகம். 166:5-15; 326:1-8)

"தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடிய நம் மகனை உன் பரத்தையானவன் அனைத்து நின்றதை யான் கண்டேன் ஆதலால், தலைவன் தனக்கு யாரையும் அறியேன் எனப் பொய் கூறவேண்டாம் என்று ஊடினாள் மற்றொருத்தி" (அகம். 16:1-19)

தலைவி தலைவனிடம் ஊடி நிற்றல்

"நேற்றுப் பரத்தையொருத்தி, தலைவன் மார்பில் துயின்று தெருவில் உலாவிச் சென்றாள் என்றும், இன்று அவள் துவண்டமாலையுடன், கொடிபோல் உன் முயக்கமில்லாது தெருவில் சென்றனள். ஆதலால் தனக்கு யாரையுமே தெரியாது என்றுரைக்காதே என்று கூறி ஊடினாள்." (நற். 20) பரத்தையால் தீண்டப்பெற்ற மார்பை இனியான் தீண்டேன் என ஊடியதை,

"நின் நலத் தகுவியை மயங்கிய மார்பே" (அகம். 196:13)

எனும் பாடலடி மூலம் விளக்குகிறது. மேலும், தற்போது என் மீது காதல் உள்ளவன் போல் நெருங்குகின்றான். ஆனால் பரத்தைத் தொடர்புக் கொண்ட காலத்தில் எனது பூமாலை வாடும்படி செய்த பகைவன் தலைவன் என்று ஊடியதை,

"......... என்
ஒலிபல் கூந்தல் நலம் பெறப் புனைந்த
முகை அவிழ் கோதை வாட்டிய
பகைவன்மன்? யான் மறந்து அமைகலனே"! (நற். 260:7-10)

எனும் கூற்றால் அறியபடுகிறது.

"தலைவன், பரத்தையரொடு வதுவை அயர்ந்தான் என ஊரவர் கூறக்கேட்டு ஊடுகின்றாள் ஒருத்தி" (நற். 36:11-12 96:9-18), அவ்வாறு "ஊரவர் எழுப்பிய அலரின் ஆரவாரம் மிகத் தோன்றியது என்று ஊடி நின்றாள் மற்றொருத்தி" (நற். 48:7-16, 206:6-16) இவ்வாறாக மருதநில மகளிரின் ஊடலுக்குப் பரத்தையே காரணமாக விளங்குகிறாள். ஊடலுக்கான நிகழ்வுகள் பலவாயினும் அந்நிகழ்வுக்கெல்லாம் காரணமாக பரத்தையே திகழ்கிறாள் என்பதை அறியமுடிகிறது.

தலைவனின் பரத்தைமையைச் சுட்டுதல்

இயற்கை நிகழ்வுகள், விலங்குகள் மற்றும் மனிதர்களின் செயல்களைக் கொண்டு தலைவனின் பரத்தையைச் சுட்டுகின்றனர். மகளிர் தலைவன் தன் மனையகத்தே வாழும் பொழுது பரத்தையர் உறவையே எண்ணுவான் என்பதனை

"வீட்டகத்தே வேரூன்றியிருக்கும் வயலை

அயலே படர்ந்து வேழத்தினைச் சுற்றும் துறைகேழூரன்" (ஐங். 11:1-2)

என்று சுட்டுகின்றாள். மேலும், வீட்டகத்து மரத்தின் கொம்பினை விடுத்து அயலேயுள்ள வலியற்ற நாணலிற் படரும் என்றது, இழிகுல மகளிரை நாடிச் சென்றான் தலைவன் என்றனர்.

"கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்" (ஐங். 12:1)

எனும் அடியில், வரம்பினுள் அடங்காது, தன் விருப்பப்படி வளரும் வேழம் தன்னகத்தே சாறும் இனிமையும் அற்றதாய் உள்துறை உடையதாய் இருந்தும், அகத்தே செறிவுடையதும் ஆற்றவும் இனிமை பயப்பதும் பெரும்பயன் தருவதும் வயலகத்தே அடங்கி வாழ்வதுமாகிய கரும்பு போலப் பூத்துக் காண்போரை மருட்டுவதைப் போன்று, தலைவன் அகத்தே அன்பும் இனிமையும் அற்றவராய்ப் பொய்மையே உடையரும், பரத்தையின் புறத்தோற்றத்தாலே மயங்கி பொது மகளிர்க்குக் குல மகளிரைப் போலச் சிறப்புச் செய்கிறான் என்று சுட்டுவதை உணராம். மேலும்,

"மணல் ஆடு மலிர்நிறை விரும்பிய, ஒண்தழை

புனல் ஆடு மகளிர்க்கும் புணர் துணை உதவும்

வேழ மூதூர் ஊரன்" (ஐங். 15:1-3)

என்னும் பாடலடிகளின் வழி, வேழம் புனலாடும் பெண்டிர்க்கு உதவுதல்போலத் தலைவனும் பரத்தையர்க்கு வேண்டுவன செய்வான் என்பதை அறியலாம்.

குடிக்கேற்ற உயர்நெறி பிறழில் ஊடல்

"பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்

வாளை நாள் இரை பெறு உம் ஊர்" (ஐங். 63:1-2)

என்ற பாடலின்வழி நீர்நாய் பொய்கையை இருப்பிடமாகக் கொண்டிருந்தும் தன்னுடலின் புலால் நாற்றத்தைக் கழுவிக் கொள்ளாமல் மீண்டும் புலால் நாறும் வாளையையெ இரையாக கொள்ளும் தன்மையொத்து தலைவனும்தன் குடிக்கேற்ற உயர்நெறி நில்லானாய் இழிந்த காமநுகர்ச் சிக்கெனப் பரத்தையரை நாடி நுகர்கின்றான் எனச் சுட்டுகிறாள்.

"நானிரை தரீஇய எழுந்த நீர்நாய்

வாளையோடு உழப்ப" (அகம். 336:4-5)

எனவும்,

"பொய்கை நீர்நாய்ப் புலவு நாறு இரும்போத்து

வாளை நாளிரை தேரும் ஊர" (அகம். 386:1-2)

எனவும் வரும் அடிகள் உணர்த்துகின்றன.

பரத்தை ஒழுக்கத்தை எருமையுடன் சுட்டுதல்

"கருங்கோட்டு எருமைகயிறு பரிந்து அசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நான்மேயல் ஆரும்
புனல் முற்று ஊரன்" (ஐங். 95:1-3)

எனும் பாடலடிகளின் கூற்றுப்படி தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை எருமையின் செயலுடன் குறித்துள்ளதை அறியலாம்.

ஊடல் கொண்ட தலைவி தலைவனை விளிக்கும் திறன்

உள்ளுறை உவமங்கள் பலவற்றைப் பழந்தமிழ் இலக்கியத்தில் பலவிடங்களில் புலவர்கள் கையாளுகின்றனர். உள்ளுறை என்பது கூறப்படும் சொல்லுக்கு, நேரடிப் பொருளன்றியும் வேறொரு குறிப்புப் பொருள், அதனுள் பொதிந்திருப்பது உள்ளுறை என அழைக்கப்படும். உள்ளுறை பற்றிய தொல்காப்பியர் நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணரும், "உள்ளுறையாவது பிறிதொரு பொருள் புலப்படுமாறு நிற்பதொன்று என்றும் அது கருப்பொருள் பற்றிவரும் என்றும் கூறியுள்ளார்." (தொல்.பொருள்.அகத்.இளம்.நூற்.50. பொரு.238-240)

"கவிஞன் தனது பாட்டில் புலப்படக் கூறும் உவமையுடன் புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாக என்று தன் உள்ளத்தே கருதி, அப்பாட்டைக் கேட்போர் உள்ளத்திலும் அவ்வாறே நிகழுமாறு செய்து அங்ஙனம் உணர்த்துதற்கு உறுப்பாகிய சிறப்பான சொற்களைக் கொண்டு முடிப்பதற்கும்" என்று சுப்புரெட்டியார் கூறியுள்ளதை அறியமுடிகிறது. (ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப.456)

தலைவி மருதக் கருப்பொருள்களால் உள்ளுறையமைத்துத் தலைவனோடு கொண்ட ஊடலை வெளிப்படுத்தி நிற்கின்றாள். தலைவி வயிறு வாய்த்த நிலையில், பரத்தையிற் பிரிந்த தலைவன், பிள்ளைப் பேற்றுக்குப் பின் தலைவி புனலாடிப் புனிறு தீர்ந்தமையறிகின்றான். ஆற்றாமை வாயிலாக அவளை வந்தடைகின்றான். தலைவனிடம் ஊடல் கொண்ட தலைவி,

"கரும்புநடு பரத்தியிற் கலித்த வாம்பல்
கரும்பசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கனமோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே" (நற். 260)

எனக்கூறி தன்னை தொடவிடாது தடுக்கின்றாள் என்பதை உள்ளுறை பாடல்வழி தலைவி தன் மன உணர்வை வெளிப்படுத்துகிறாள்.

தோழி கூற்றில் உள்ளுறை

'தன்னைத் தவிர்த்து', பிற அகமாந்தர்களின் உணர்வுகளைத் துலக்கமாக எடுத்துக்காட்டவும், அவர்தம் மனப் போராட்டங்களுக்கு உளவியல் வழித் தீர்வு காணவும் எனப் படைக்கப்பட்ட படைப்பாகவே தோழி தோன்றுவதை உய்த்துணர முடிகிறது." (ஆ. இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப. 39)

பரத்தையொழுக்கம் உடைய கணவனுக்குச் சார்பாக பாணன் வாயில் வேண்டி வந்தனன் தலைவியின் சார்பாக நின்ற தோழி அவனுக்குத் தலைவியின் ஊடற்கான காரணத்தை உள்ளுறையாக்கிக் காட்டி வாயில் மறுத்து நிற்கின்றாள். இதனைக் குறுந்தொகையின்,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனில் இழைஇயர்
தேமபொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன்" (குறுந். 85)

என்ற பாடல் வரிகளால் அறியலாம். அறமும், இன்பமுடைய கரும்பனைய தலைவியைப் பிரிந்து, பரத்தையால் நாறாவெண்பூவைக் கோதும் ஊர்க்குருவி போன்றவன் தலைவன் என்பதுரைக்கின்றாள். இவ்வுள்ளுரையால் தலைவியின் ஊடற்காரணம் புலனாகின்றது. இங்ஙனம் உள்ளுறுத்துக் கூறுவதில் மருதநிலத் தோழி, தலைவி ஆகியோர் கூற்றுக்களில் நீதிநெறிகள் அமைந்து அறிவுறுத்தும் முறையமையைக் காணலாம். அம்மகளிரது கூற்றுகளில் வாழ்க்கை கற்பு வாழ்வாக அமையவேண்டும் என்னும் நீதியைப் புலப்படுத்த விலங்கினங்கள், சமுதாய நிகழ்ச்சி, தொழில் ஆகியன குறியீடுகளாய் அமைக்கப்பட்டுள்ளன.

விலங்கினங்களின் செயல்கள்

விலங்கினங்களின் செய்திகளும், அவற்றின் வாழ்வு நிகழ்ச்சிகளுமே தலைவனை விளிக்கும் மருதநில மகளிரின் கூற்றுக்களில் பெரும்பான்மையும் இடம்பெற்றுள்ளன. தோழி மற்றும் தலைவி கூற்று உணர்த்துவன பரத்தை நாடல் தீது என்பதாகும். அதற்குக் குறியீடாகப் பயன்படுவன எருமை, நண்டு, ஆமை, காரான், நாரை, கோழி, யானை, நீர்நாய், இறால் போன்ற மருதமக் கருப்பொருட்களும் அவற்றின் முறையற்ற செயல்களுமாகும். இக்குறியீடுகள் உணர்த்தும் பொருள் நன்மையை நோக்கியதாக, ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதியை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இந்நீதியினின்று மாறுபட்டால் விளைவு என்ன என்பதைப் புலப்படுத்த முயன்ற புலவர்கள் விலங்கினக் காட்சிகளை அமைத்துள்ளனர்.

வலிமை மிக்க தலைமைப் பண்பையும் உடல் வலிமையையும் உடைய எருமைக் கடாவான குளிர்ந்த மலர்களையுடைய நீர்நிலையில் விழுந்து பகற்பொழுது முழுதும் சுழன்று திரிந்து பின்பு, மடமையுடைய இளைய எருமையைத் தொடர்ந்து சென்றுதோட்டங்களை அடையும். அதன் பின்பு ஊர்ப் பொது நிலத்திலே தங்கும். இந்நிகழ்வை,

"வலி மிகு முன்பின் அண்ணல் ஏஎறு
பனி மலர்ப் பொய்கைப் பகல் செல மறுகி
மடக்கண் எருமை மாண் நாகு தழீஇ
படப்பை நண்ணிப் பழனத்து அல்கும்" (அகம். 146:1-4)

என வரும் அடிகள் மூலம் அறியலாம்.

நீர் நண்டானது கொக்கைக் கண்டு அஞ்சி, விரைந்து தன்னுடைய வளையின்கண் புகும் என்பதை,

"வேப்பு நனை அன்ன நெடுங் கண்நீர் ஞெண்டு
இரை தேர்வெண் குருகு அஞ்சி, அயலது

ஒலித்த பகன்றை இருஞ் சேற்று அள்ளல்

திதலையின் வரிப்ப ஓடி, விரைந்து தன்

நீர் மலி மண் அளைச் செறியும்" (அகம். 176:8-12)

என்னும் அடிகள் விளக்குகின்றன.

மேற்கண்ட விலங்கினங்களின் செயல்கள் தலைவன் பரத்தையை நாடல், அவளுடன் தொடர்பு கொள்ளல் ஆகிய உட்பொருளை உணர்த்துகின்றன. இதன்வழி தலைவனின் பரத்தை நாடல் நீதியற்ற செயல் என மருதப் பாடல்வழி உணர்த்தியுள்ளதை அறியமுடிகிறது.

சமுதாய நிகழ்ச்சிகள்

விலங்குகளின் செயல்களை எடுத்துச் சொல்லி நீதி உணர்த்திய புலவர்கள் சமுதாயத்தில் மனிதர்கள் செய்யும் தொழில்கள் மற்றம் சில நிகழ்வுகள் வழியும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் நீதியை எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதை,

"நறவுண் மண்டை நுடக்கலின் இறவுக்கலித்துப்,

பூட்டு அறு வில்லிற் கூட்டுமுதல் தெறிக்கும்" (அகம். 96:1-2)

மேலும்,

"வயலில் உழுபவரான உழவர் செருக்குற்று எழுப்பிய ஏர் மங்கலப் பாட்டினது ஒலிக்கின்ற இசைக்கு அஞ்சிப் பறந்த மயிலானது, அணங்கினையுடைய குன்றில் சென்று தங்கும்." (அகம். 266:16-19)

அகநானூற்றுப் பாடல்வழி தலைவனின் விலங்குப் பண்பைக் காட்டுவதாக அமைந்துள்ளன. தலைவன் இரவெல்லாம் பரத்தையோடு களித்தாடுதல், பரத்தையர் நலத்தை நுகர்ந்து, அப்பரத்தையர் தாய்மார் நெஞ்சு வருந்த அவ்விடத்தை விட்டுப்போதல், தலைவனின் பரத்தைமை குறித்து ஊரவர் எழுப்பும் அலர், அவ்வலரைக் கண்டுகொள்ளாத தலைவனின் செருக்கு ஆகியவை மேற்கண்ட செயல்வழிச் சுட்டப்படுகின்றது.

கூடாநட்பை எடுத்தியம்பும் திறன்

"மனிதன் தீயவனாகவோஅவனது செயல்பாடுகள் தீதுடையதாகவோ திகழக் காரணிகளாய் அமைவன அவனுடைய தற்சார்பும், துணைச் சேர்க்கையுமே ஆகும். துணைச்சேர்க்கை என்பது கூடா நட்பைக் குறிக்க, தற்சார்பு என்பது வசதி, தன் உணர்வு, விரக்தி, வறுமை என்னும் நான்கு நிலைகளில் செயல்படுகின்றன என்பதை அறியமுடிகிறது." (அகநானூற்றில் வாழ்வியல் நீதிநெறிகள், ப.53)

தலைவனைப் பரத்தையர்களிடம் சேர்ப்பித்துப் பின் அவன் வாயிலாக வரும்போது அம்மகளிர் கடுமையாகவே அவனைச் சாடுகின்றனர். மேலும் தலைவன் குருவியின் செயலைக் காணும் வாய்ப்பைப் பெற்று இருந்தும், தன் தலைவியிடம் அன்பும் கடமையுணர்வும் தோன்றவில்லை என்று இடித்து உரைக்கின்றாள் தோழி. இத்தகைய பொருளாழம் மிக்க வடம வண்ணக்கன் தாமோதரன் பாடல்,

“யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரிஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே” (குறுந். 85)

என்பதின் வழி புலப்படும். மேலும்,

“பழனப் பொய்கை அடைகரைப் பிரம்பின்
அரவாய் அன்ன அம்முள் நெடுங்கொடி
அருவி ஆம்பல் அகலடை துடக்கி
அசைவரல் வாடை துக்கலின் ஊதுலை
விசைவாங்கு தோலின் வீங்குபு ஞெகிழுங்
கழனியாம் படப்பைக் காஞ்சியுர” (அகம். 96:3-8)

என்னும் அடிகள் அடைகரையில் படர்ந்த பிரப்பங்கொடி ஆம்பலிலையைப் பிணித்துக் காற்று உயர்ந்த அவ்விலை உயர்த்தும். காற்று வாராதொழியின் தாழ்த்தும் கிடப்பதுபோல தலைவனும் பாணன் அழைக்கும்போது பரத்தையர் சேரிக்குப் போவதும் அழையாவிடின் இல்லத்திற்கு வருவதுமாக உழல்கின்றான் என உரைக்கின்றது என்பதை இப்பாடல்வழி அறியப்படுகிறது.

போர்நெறியைக் கொண்டு நீதி உணர்த்துதல்

தலைவனது பரத்தையொழுக்கம் அலராக ஊரவரால் தூற்றப்படுவதையும் அவ்வலர் போர் நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுவதையும் மருதத்திணைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

“பாண்டின் நெடுஞ்செழியனும்” (அகம். 36:13-23), “அஃதையின் தந்தை” (அகம். 96:11-17), பாண்டிய மன்ன்ன்” (அகம். 116:11-17), “தித்தன் வெளியன்” (அகம். 226:13-17), “கரிகால் வளவன்” (அகம். 246:8-14), “பசும்பூண் பாண்டியன்” (அகம். 296:7-14) அகியோர் போர்க்களத்தில் வென்றபோது ஏற்பட்ட ஆரவாரத்தை விடவும் தலைவன் பரத்தையரொடு வதுவை அயர்தல் மற்றும் அவளோடு சென்று புனலாடுதல் ஆகிய தலைவனது பரத்தைமை ஒழுக்கம் குறித்து ஊரில் எழுந்த அலரின் ஆரம்பம் மிகத் தோன்றியதாம். இதனை,

“வென்றி கொள்வீரர் ஆர்ப்பினும் பெரிதே” (அகம். 36:23)

“களிறு கவர் கம்பலை போல
அலர் ஆகின்றது பலர் வாய்ப்பட்டே” (அகம். 96:17-18)

“ஆடுகொள் வியன் களத்து ஆர்ப்பினும் பெரிதே” (அகம். 116:19)

“பெறாஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிதே” (அகம். 226:17

“தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே” (அகம். 246:14)

அலர் ஆகின்றது அது பலர் வாய்ப்பட்டே” (அகம். 296:14)

என்னும் பாடல்வழி அறியப்படுகிறது. கவிஞனின் உள்நோக்கம், பாடுபொருளில் நீதி உணர்த்துவது ஆகும். ஆதலால்தான் வேந்தர்கள் அறநெறியில் பெற்ற வெற்றியின் ஆரவாரத்தைக் காட்டிலும்

தலைவனின் பரத்தைமையொழுக்கம் மிக்கு இருப்பதைக் கூறி, அத்தகாத ஒழுக்கம் தலைவன் மாண்புக்கு இழிவை ஏற்படுத்துவதோடு சான்றோர் வகுத்த அறவாழ்விற்கும் களங்கத்தை ஏற்படுத்துகிறது என்னும் நீதியை உணர்த்துகின்றனர்.

ஊடல் கூடலில் முடிதல்

ஆண் தனித்து வாழின் சிறப்பில்லை. பெண் தனித்து வாழ்ந்தாலும் பயனில்லை. இருவரும் இணையும்போது தான் மானுடம் வாழ்கிறது, வளர்கிறது, உயர்கிறது, இவ்வுண்மையைத்தான் சங்க மருதத்திணைப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன என்பதை இப்பாடல் வழி,

"…. மாண்இழை மகளிரை

எம்மனைத் தந்து நீ தழீஇயினும், அவர்தம்

புன்மனத்து உண்மையோ அரிதே" (நற். 330:6-8)

என்னும் பாடல்வழி அறியப்படுகிறது. ஆதலால் உண்மையான அன்புடன் உயர்ந்த குணங்களைக் கொண்டு விளங்கும் தலைவியுடன் வாழ்வதே சிறப்பு எய்துவதாகும்.

"தன் மனையாளுடன் ஒருத்திக்கு ஒருவன் என்னும் அறவாழ்வினை மேற்கொள்ளுதலே சான்றோர் செல்வம் எனப் போற்றியுள்ளதை நற்றிணை எடுத்துக்காட்டுகிறது." (நற். 210:6-9) இங்கு, தான் கொண்ட தலைவியே சிறப்பு மிகுந்தவள் என்ற எண்ணம் தலைவனுக்கு வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே ஊடல் ஒழித்து இல்லற வாழ்வில் இணைந்து மானுடம் தழைக்க வாழவேண்டும் என்ற நீதியைப் புலவர் பெருமக்கள் மருத ஊடலில் உட்புதைத்து உள்ளமை தெளிவாகப் புலப்படுகின்றது என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

மருத நிலத்திற்கு ஊடல் உரியது என்றும் அது மரபுவழிப் புனையப்பட்டுள்ளன என்பதை விளக்குவதாக அமைகிறது. தலைவன் பரத்தையோடு புனல் விளையாட்டினாலும் அவளின் இல்லத்தில் அயர்ந்ததாலும் ஊர்மக்களின் அலறினால் தலைவி ஊடல் கொள்வதாக அறியப்படுகிறது. மேலும் தலைவனின் பரத்தையொழுக்கத்தை இயற்கை நிகழ்வுகளுடனும் விலங்கினங்களின் செயல்பாடுகளுடனும், சமுதாய நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் இடித்துரைக்கப்பட்டுள்ளது. பரத்தையர் ஈடுபாட்டிற்கு கூடாநட்பு காரணமாக அமைந்ததைச் சுட்டிக் கண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசர் பெருமக்களின் போர்நெறியைக் கொண்டு தலைவனுக்கு நீதி உணர்த்தப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. இல்லற வாழ்வு இனிமையடைய ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தல் அவசியம். எனவே ஆணும் பெண்ணும் தன் நிலையில் திரியாது ஒழுக்கமுடன் வாழ்வதே அறமாகும் என்பதை இக்கட்டுரையின் வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பது தின்னம்.

துணைநூற்பட்டியல்

[1]. அனந்தராமையர், இ.வை., (ப.ஆ) கலித்தொகை மூலம் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 1984.

[2]. அகத்தியலிங்கம், ச., சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 1997.

[3]. அகிலா சிவசங்கர், (தொ.ஆ), தமிழ் இலக்கியங்கள் காட்டும் தொழில்கள், ஜனகா பதிப்பகம். சென்னை – 2011.

[4]. அழகம்மை, கே.பி., சமூக நோக்கில் சங்க மகளிர், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 2001.

[5]. குளோரியா சுந்தரமதி, இலா., சங்க இலக்கியம் மருதம் கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் – 1973.

[6]. இளந்திரையன், சாலை., சமுதாய நோக்கு, தமிழ்புத்தகாலயம். சென்னை – 1970.

[7]. இராமகிருட்டிணன், ஆ., அகத்திணை மாந்தர் – ஓர் ஆய்வு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை – 1982.

[8]. சண்முகம் பிள்ளை, மு., (ப.ஆ) குறுந்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 1985.

[9]. சாமிநாதையர், உ.வே., (ப.ஆ) குறுந்தொகை – மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு. சென்னை – 5 ஆம் பதிப்பு – 1957.

[10]. மேற்படி ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 5 ம் பதிப்பு – 1957.

[11]. மேற்படி பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 5 ம் பதிப்பு – 1980.

[12]. மேற்படி பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியார் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர் – 1986.

[13]. சுப்பிரமணியன், ச.வே., (ப.ஆ) தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2 ம் பதிப்பு – 2009.

[14]. சோமசுந்தரனார், பொ.வே., அகநானூறு (களிற்றியானை நிரை), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை – 1970.

[15]. நக்கீரனார், (உ.ஆ)., இறையனார் அகப்பொருள், சைவசித்தாந்த நுற்பதிப்புக்கழகம், மறுபதிப்பு, சென்னை – 1983.

[16]. நச்சினார்க்கினியர், (உ.ஆ)., தொல்காப்பியம் – பொருளதிகாரம், சைவசித்தாந்த நுற்பதிப்புக்கழகம், மறுபதிப்பு, சென்னை – 1983.

[17]. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர், நற்றிணை நானூறு மூலமும் உரையும், சைர்வித்தியாபாநு, பாலனயந்திரசாலை, 5 ஆம் பதிப்பு, சென்னை – 1976.

[18]. விசுநாதன், அ., (உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 3 ஆம் பதிப்பு, 2007.

[19]. வையாபுரிப்பிள்ளை, எஸ்., சங்க இலக்கியம் (இரு பகுதிகள்), பாரி நிலையம், 2 – ம் பதிப்பு, சென்னை – 1967.

[20]. ஔவை துரைசாமிப்பிள்ளை, நற்றிணை விளக்கவுரை, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை – 1968.